# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2022

ஆண்டு: 9 திகதி: 18.06.2022

நேரம்: 2 1/2 மணித்தியாலங்கள்

ஆசிரியர் திரு சரவணமுத்து தேவராசா

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.

1 வணக்கம்:

______________________________________________________________________

______________________________________________________________________

2 மல்லிகைப் பூ:

______________________________________________________________________

______________________________________________________________________

3 சூரியன்:

______________________________________________________________________

______________________________________________________________________

4 விண்வெளி:

______________________________________________________________________

______________________________________________________________________

5 அன்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

6 விருப்பம்:

______________________________________________________________________

______________________________________________________________________

7 புத்தகம்:

______________________________________________________________________

______________________________________________________________________

8: விளையாடினேன்:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

9 வருவார்கள்:

______________________________________________________________________

__________________________________________________________________

10 ஆடியது:

______________________________________________________________________

______________________________________________________________________

11 நடிப்பார்கள்:

______________________________________________________________________

______________________________________________________________________

12 படிக்கிறான்:

________________________________________________________________________

________________________________________________________________________

13 சிரித்தனர்:

________________________________________________________________________

________________________________________________________________________

14 விருந்தினர்:

________________________________________________________________________

________________________________________________________________________

15 நன்றி:

________________________________________________________________________

________________________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 5X3=15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதனின் அத்தியாவசிய தேவைகளாக உணவு, உடை, உறைவிடம் என்பன விளங்குகின்றன. இத் தேவைகளைப் பூர்த்தி செயவதற்காக மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கின்றார்கள். ஆதி மனிதன் மரங்களில் தொங்கிய காய்களையும், கனிகளையும் பறித்து உண்டான். மிருகங்களை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை நெருப்பில் சுட்டு உண்டான். நாகரிகம் அடையாத பழைய கால மக்கள் செய்த இந்தச் செயலைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு பாபகியூ ( Barbeque) என்ற பெயரில் வித்தியாசமான முறையில் நாகரிகம் அடைந்த மக்கள் தற்போது செய்கிறார்கள். அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பிறந்த நாள்க் கொண்டாட்டங்களில் இந்த பாபகியூ முக்கியமாக விடயமாகிவிட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.

காலப்போக்கில் மக்கள் அரிசி, கோதுமை, கேழ்வரகு(குரக்கன்) தினை போன்ற தானியங்களையும், கத்தரிக்காய், வெண்டிக்காய், முருங்கைக்காய், பயற்றங்காய் போன்ற

காய்கறிகளையும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் மூலம் உற்பத்தி செய்யப் பழகிக்கொண்டனர். தமிழர்களின் பிரதான உணவாக நெல் அரிசிச் சோறும், கறிகளும் விளங்குகின்றன. சோறு காய்ச்சி மரக்கறி, மீன், இறைச்சி போன்றவற்றில் கறிகள் சமைத்து அவர்கள் உண்கின்றனர். அரிசிமாவைப் பயன்படுத்திப் பிட்டு, இடியப்பம், அப்பம் போன்ற உணவு வகைகளையும், உழுந்து அரிசிமா என்பவற்றைக் கலந்து தோசை, இட்லி போன்ற உணவு வகைகளையும் சமைக்கின்றார்கள். அம்மா சமைக்கின்ற இந்த உணவு வகைகள் சுவையானவை, உடலுக்கு ஆரோக்கியத்தை அளிப்பவை, உடனடியாக சமைத்துப் பரிமாறப்படுபவை. இவ்வாறு தமிழர்களின் உணவு வகைகளில் பல்வேறு சிறப்புக்கள் இருக்கும் போது, அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற தமிழ்ப் பிள்ளைகள் கொழுப்பு நிறைந்த சத்துக்கள் குறைந்த, எப்போதோ தாயாரிக்கப்பட்டுக் குளிர்சாதனப் பெட்டியில் நீண்ட காலத்திற்கு வைக்கப்பட்டு சூடு காட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற விரைவு உணவு வகைகளை விரும்பி உண்கின்றனர். இப்படி தொடர்ச்சியாக உண்டால் அவர்கள் நோயாளிகளாக மாறிவிடுவார்கள் என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் மரங்களின் இலைகளையும், மரப்பட்டைகளையும் மக்கள் உடைகளாக உடுத்தனர். நாளடைவில் பருத்தி, பட்டு போன்றவற்றைப் பயன்படுத்தி உடைகளைத் தயாரித்து அணியப் பழகிக் கொண்டனர். குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கம்பளி ஆடைகளைத் தயாரித்து அணிகின்றனர். முற்காலத்தில் மக்கள் மரங்களின் கீழும், மலைக் குகைகளிலும் வாழ்ந்தனர். பின்பு செம்மண், களிமண் போன்றவற்றால் வீடு கட்டி, பனையோலை, தென்னோலை போன்றவற்றால் கூரை அமைத்துக் குடிசைகளை உருவாக்கி வாழ்ந்தனர். பிற்காலத்தில் கல்வீடு கட்டி வாழப் பழகிக் கொண்டனர்.

1 மனிதனின் அத்தியாவசிய தேவைகள் மூன்று எவை?

____________________________________________

2 ஆதி மனிதன் மிருகத்தைத் துரத்திச் சென்று கூரான ஆயுதத்தால் அவற்றைக் கொன்று நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டான். நவீன மனிதன் பாபகியூ என்ற பெயரில் அதனையே செய்கின்றான். இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் எவை

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

3 தமிழர்களின் உணவுகளா, விரைவு உணவுகளா சிறந்தவை? காரணங்கள் எழுதுக.

4 ஆதி மனிதன் எவற்றை ஆடைகளாக அணிந்தான்?

5 மக்களின் உறைவிடங்களின் ஆரம்பத்தையும் பின்பு எவ்வாறு மாற்றமடைந்தது என்பதையும் சுருக்கமாக எழுதுக.

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

அன்று வெள்ளிக்கிழமை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தேன், அம்மா சுவாமி அறையில் ஏற்றி வைத்த ஊது பத்தியின் வாசனை காற்றோடு கலந்து வந்து என் மூக்கை துளைத்து என் தூக்கத்தைக் கலைத்தது. படுக்கையை விட்டு எழுந்து குளிக்கச் செல்லுங்கள். தோசை சுட்டு மேசையில் வைத்துள்ளேன். சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்குச் செல்லுங்கள். நானும் அப்பாவும் வேலைக்குச் செல்கிறோம் என்று அம்மா கூறிவிட்டுச் சென்றார். அம்மாவையும், அப்பாவையும் வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு குளிக்கச் சென்றேன். குளித்துவிட்டு இறைவனை வணங்குவதற்காக சுவாமி அறைக்குள் சென்றேன். கண்களை மூடியவாறு இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தேன். குழந்தையே இந்தச் சிறிய வயதில் என்மீது மிகுந்த பக்தி கொண்டிருக்கின்றாய். உனக்கு என்ன வரம் வேண்டும்? ஒரு குரல் கேட்டது. என்னைத் தவிர வீட்டில் யாருமில்லையே, யார் பேசுவது?

அச்சத்துடன் கண்களைத் திறந்தேன். என்ன ஆச்சரியம்? "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற பழமொழிக்கிணங்கப் கடவுள் என் கண் முன் நின்றார். நான் காண்பது கனவா? நனவா? என்று எனக்குள் கேட்டுவிட்டு கைகளைக் கிள்ளிப் பார்த்தேன். வலித்தது. கனவல்ல நிஜம் என்பதைப் புரிந்துகொண்டேன். எனது செயலைப் பார்த்துச் சிரித்த கடவுள் என்ன வரம் வேண்டும் கேள் என்று மீண்டும் கூறினார். கடவுளைப் பார்த்த அதிர்ச்சியாலும், ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் திகைத்து நின்றேன்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

பின்வரும் 15 தனிவாக்கியங்களையும் ஒரு வினை முற்றில் முடியக் கூடிய தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. கடந்த 27ஆம் திகதி மார்ச் மாதம் கோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவுக் கலை விழா நடைபெற்றது.

2. அதற்காக சில்வர் வோட்டரில் உள்ள பகாய் மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

3. வாசலிலே கோலம் போட்டு நிறைகுடம் வைத்திருந்தார்கள்.

4. பி.ப நான்கு மணியானதும் பெற்றோர்களும், ஆசிரியர்களும், பார்வையாளர்களும் இருக்கைகளில் அமர்ந்தனர்.

5. 33 வருடங்களுக்கு மேலாக ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி நிர்மலா தயாளன் அவர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

6. பாடல் குழுவினர் தமிழ்மொழி வாழ்த்து கல்லூரிக் கீதம் , தேசிய கீதம் என்பவற்றைப் பாடினர்.

7. முன்பள்ளி மாணவர்கள் பாடலுக்கு அழகாக நடனம் ஆடினர்.

8. பாலர் கீழ்ப்பிரிவு வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்கள் சிறந்த நிகழ்ச்சிகளை நடாத்திக் காட்டினர்.

9. பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது.

10. தலைவர், அதிபர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

11. பன்னிரெண்டாம் வகுப்பில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

12. சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

13. இருபது நிமிடங்கள் இடைவேளை விடப்பட்டது.

14. ஆறாம் வகுப்பிலிருந்து பதினொராம் வகுப்பு வரையிலான மாணவர்கள் நடித்த "சேரவம்ச தீரர்கள்" என்னும் நாடகம் மேடையேறியது.

15. இரவு ஒன்பது மணிக்கு கலைவிழா இனிதே நிறைவடைந்தது.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

கடிதம் எழுதுதல்

சிட்னியில், பார்த்து ரசிக்கக் கூடிய அழகான இடங்களைப் பற்றிக் குறிப்பிட்டு சிட்னிக்கு வருகை தந்து அவற்றைப் பார்வையிட்டுச் செல்லுமாறு இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள மாமா, மாமிக்கு 100 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 13 |
|---|---|---|---|---|---|

கட்டுரை எழுதுதல்

பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாது ஒரு கட்டுரை எழுதுக

1 அன்னையர் தினம்.
2 மறக்க முடியாத விமானப் பயணம்
3 நான் கண்ட பயங்கரமான கனவு